# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 61 /பேரூ/2026**
**நாள் : 10 .07 .2026**

மூ. ஈஸ்வரன்,
சின்னமனூர்,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், சின்னமனூர், க.எண். 2/4, காந்திநகர் காலனி, 4வது வார்டு, 4வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவரது 29.12.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.12.2025 அன்று பெறப்பட்டு, 61/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், சின்னமனூர், க.எண். 2/4, காந்திநகர் காலனி, 4வது வார்டு, 4வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 29.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரின் குறிப்பாணை ந.க. எண். 7815/2023/அ3 நாள் 28.11.2025 மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் குறிப்பாணை ந.க.எண்.5168/2025/பேரூ2 நாள் 01.12.2025ன்படி பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரம் பேரூராட்சியில் புதிதாக துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் முன்னுரிமை அடிப்படையில் அரசாணை நிலை எண். 23ன்படியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண். 227 மற்றும் 228ன்படியும் பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் "01.01.2025 பணி மூப்பு பட்டியலின்படி 08.12.2025ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்திட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி செயல்படாமல் தன்னிச்சையாக அரசாணைக்கும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதி எண்களுக்கு மாறாக ஒரு முன்னுரிமை பட்டியல் தயார் செய்து அதில் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் எனக்கு பின்பாக பணியில் வந்து சேர்ந்த திரு. சு. பழனிச்சாமி (எ) தேனிவீரன் என்பவரை முன்னுக்கு கொண்டு வந்து என்னை பின்னுக்கு தள்ளி முன்னுரிமை பட்டியலை தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடிதத்தில் கண்டுள்ளபடியும், அரசாணைபடியும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதி எண்களின்படியும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 26.03.2025 நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 302/2025/பேரூ.2ல் உள்ள தேனி மாவட்ட பேரூராட்சிகளின் பணி மூப்பு பட்டியலின்படியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடித எண்.37790/பேரூ.2/98-2 நாள் 22.03.1999ன்படியும் முதுநிலையை கணக்கிடும்பொழுது பணியாளர்களை அவர்களது பணி நிலைக்கேற்ப வரிசைப்படுத்தி, அதன்படி முதுநிலை கணக்கிடப்பட வேண்டும்.

ஒரே ஊதிய விகிதம் உள்ள பல்வேறு பணியிடங்களைப் பொருத்தவரை அவர்கள் எந்த தேதியில் பணியில் சேர்ந்தார்களோ அந்த தேதியின் அடிப்படையிலேயே முதுநிலை கணக்கிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைக்கு இணங்க முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளை கணக்கில் எடுத்துக்கொண்டு முன்னுரிமை பட்டியல் தயார் செய்ய வேண்டும்" என்று ஆட்சேபனையை தெரிவித்து தற்போது நான் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையிலும் கல்வித்தகுதி அடிப்படையிலும் தகுதியான எனக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு மேற்படி இயக்குநர் மற்றும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உத்தரவின்படி காலதாமதம் செய்யாமல் பதவி உயர்வு பணி நியமன ஆணை வழங்கிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று மேற்கண்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்னும் மேற்கண்ட காலிப் பணியிடத்தை விதிகளுக்கும், அரசாணைக்கும், உயர் அலுவலர்களின் உத்தரவின்படி நிரப்பாமல் காலதாமதம் செய்து வரும் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இளங்கோவன் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்து துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தை பூர்த்தி செய்திட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 17/2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சென்னை, பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் 19/06/2025 நாளிட்ட செயல்முறைகள் ந.க.எண். 7815/2025-1/அ3ல் அரசாணை (நிலை ) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 21.02.2024ன் அடிப்படையில் திருத்திய அளவு கோலின்படி (Norms) அனைத்து நிலை பேரூராட்சிகளுக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்களை பணி நிரவல் மூலமும் மற்றும் புதிய பணியிடங்கள் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7815/2023-2/அ3 நாள் 19.06.2025ல் திருத்திய அளவுகோலின்படி (Norms) அனைத்து நிலை பேரூராட்சிகளிலும் கூடுதலாக உள்ள துப்புரவு மேற்பார்வையாளர்களை பணி நிரவல் மூலமும் மற்றும் நிர்வாக காரணங்களின் அடிப்படையிலும் பணி மாறுதல் செய்தும் ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் திரு. அ. தென்னரசு என்பவரை தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சி துப்புரவு மேற்பாாவையாளராக பணியிட மாறுதல் செய்து ஆணையிடப்பட்டதனை, சென்னை பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7815/2023/அ3, நாள் 23.06.2025ன்படி பகுதி மாற்றம் செய்து சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பி. தங்கராஜ் என்பவரை தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளராக பணியிட மாறுதல் செய்து ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், மேற்காணும் சிங்கம்புணரி பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பி. தங்கராஜ் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மற்றும் தனியரின் விருப்பத்தின் அடிப்படையில், தனியருக்கு மீளவும் சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளராக பணியிடம் வழங்கி, சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7815/2023/அ3, நாள் 09.10.2025ன்படி ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 3941/2024/டி2 நாள் 13.10.2025ல் தனியரை மீளவும் சிவகங்கை மாவட்டம் புதுவயல் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளராக பணியேற்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே பண்ணைப்புரம் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் 14.10.2025 முதல் காலிப் பணியிடமாக இருந்து வருகிறது.

மேலும், அரசாணை (நிலை ) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 21.02.2024ன் அடிப்படையில் ஏற்கனவே பணி நிரவல் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணியாளர் பணியேற்பு செய்யாமல் வழக்கின் அடிப்படையில் மீள சிவகங்கை மாவட்டத்தில் பணியிடம் பெற்றுள்ள நிலையில், பண்ணைப்புரம் பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு விதிமுறைகளின்படி தகுதியான பணியாளரை கொண்டு பூர்த்தி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்பொருட்டு, பண்ணைப்புரம் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் பணி நியமனத்திற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு இப்பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் 01.01.2025ஆம் தேதிய நிலையில் பணி மூப்புரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு தூய்மை பணியாளர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், இப்பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களின் இறுதி மூப்புரிமை பட்டியல் தயார் செய்து வெளியிடப்பட்டு தூய்மை பணியாளர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். அதில், பணியமைப்பு விதி 201(ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் செய்யும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலை பணியாளராக கருதப்படுவார்.

மேற்காணும் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில், இப்பேரூராட்சிலேயே தூய்மை பணியாளராக 17.12.1998ல் தொகுப்பூதியத்தில் பணியில் சேர்ந்து 17.12.2001 முதல் காலமுறை ஊதியத்தில் கொண்டு வரப்பட்டு பணிபுரிந்து வரும் திரு. சு. பழனிச்சாமி என்ற தேனிவீரன் என்பவர் பணிமூப்புரிமை பட்டியலில் வரிசை எண். 01ல் இடம் பெற்றும் மற்றும் கல்வித் தகுதியாக 10ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்று முன்னுரிமையில் உள்ளார் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி தூய்மை பணியாளர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியிலிருந்து 23.08.2023ஆம் தேதி தூய்மை பணியாளராக பணியிட மாறுதலில் பண்ணைப்புரம் பேரூராட்சியில் பணியில் சேர்ந்தார். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார் என்பதன் அடிப்படையில், இப்பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கான 01.01.2025ஆம் தேதிய முதுநிலை பட்டியலில் தனியர் வரிசை எண்.9ல் பெற்றுள்ள காரணத்தினால் தனியரது கோரிக்கை ஏற்க இயலாத நிலையில் உள்ள விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தவிரவும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 03.04.2025ல் வெளியிடப்பட்ட தேனி மாவட்ட அனைத்து பேரூராட்சிகளில் பணிபுரியும் அனைத்து அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலைப் பணியாளர்களின் 01.01.2025ஆம் தேதிய பணிமூப்புரிமை பட்டியலானது, அப்பணியாளர்களில் முன்னுரிமை மற்றும் உரிய கல்வி தகுதி பெற்றவர்களுக்கு, 20 சதவீத பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பதவி உயர்வுக்கு, மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்படும் பட்டியலாகும். இப்பட்டியலில் புகார் மனுதாரரான திரு. மூ. ஈஸ்வரன் தூய்மை பணியாளர் பண்ணைப்புரம் பேரூராட்சி என்பவரது முன்னுரிமையானது எவ்விதத்திலும் பாதிப்புக்கு உள்ளாகாது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

<u>இணைப்பு</u>

1. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் பணி விதிகள் எண். 227 மற்றும் 228.
2. தமிழ்நாடு நகர்ப்புற அமைப்புகள் விதிகள் 2023ன் பணி விதிகள் எண். 201 (ii).
3. திரு. மூ. ஈஸ்வரன் தூய்மை பணியாளரது பணிப்பதிவேடு நகல் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பணியிட மாறுதல் ஆணை நகல்
4. திரு. சு. பழனிசாமி (எ) தேனிவீரன் தூய்மை பணியாளரது பணிப்பதிவேடு நகல்.

4. மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 20.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. மூ. ஈஸ்வரன் தனது 19.05.2026 நாளிட் கடிதத்தில் தனது தாயாரின் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் 20.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனவும் மறுவிசாரணைக்கு 2 வார கால அவகாசம் வேண்டியும் தெரிவித்து, மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பண்ணைப்புரம் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் அரசாணை நிலை எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.02.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 19.06.2025 நாளிட்ட செயல்முறை ஆணையில் பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

- புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 1 துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தை தூய்மை பணியாளர்களின் மூலம் நிரப்பிட 01.01.2025ஆம் தேதிய பண்ணைப்புரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் பணிமூப்புரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டு தூய்மை பணியாளர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, 201 (ii) (தமிழ்நாடு அரசிதழ் எண். 124, நாள் 12.04.2023)ன்படி ஒவ்வொரு பேரூராட்சியும் தனி அலகு ஆகும். அதில் பணியமைப்பு விதி 201 (ii)ன்படி சுய விருப்பத்தின் அடிப்படையில், ஒரு பேரூராட்சியிலிருந்து வேறு பேரூராட்சிக்கு பணிமாறுதல் பெறும் பணியாளர்கள் அப்பேரூராட்சியில் உள்ள அன்றைய தேதியில் பணிபுரியும் பணியாளர்களில் கடைநிலைப் பணியாளராக கருதப்படுவார்.

- இந்நிலையில் மேற்காணும் அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.02.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 19.06.2025 நாளிட்ட செயல்முறைகள் ஆணையின் அடிப்படையில் பண்ணைப்புரம் பேரூராட்சியில் 22.12.1998 தேதி முதல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த பணி மூப்புரிமை பட்டியலில் முதலாவது இடத்தில் இடம் பெற்றுள்ள திரு. சு. பழனிச்சாமி என்ற தேனிவீரன் என்பவர் இப்பேரூராட்சியில் 17.12.1998 முதல் தொகுப்பூதியத்தில் தூய்மை பணியாளராக பணியில் சேர்ந்து 21.12.2001 முதல் காலமுறை ஊதியத்தில் கொண்டுவரப்பட்ட நாளினை கணக்கில் கொண்டும் மற்றும் கல்வித் தகுதி பெற்றுள்ளதன் அடிப்படையிலும் திரு. சு. பழனிச்சாமி என்ற தேனிவீரன் என்பவர் முன்னுரிமையில் உள்ளார்.

- ஆனால், மனுதாரரான திரு. மூ. ஈஸ்வரன் தூய்மைப் பணியாளர் தன் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியிலிருந்து பண்ணைப்புரம் பேரூராட்சியில் 23.08.2023 அன்று பணியிட மாறுதலில் வந்துள்ளார். எனவே தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023,

விதி 201 (ii)ன்படி 23.08.2023 அன்று பண்ணைப்புரம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களில் கடைநிலை பணியாளராக (Junior Most) இருப்பதாலும், 01.01.2025 அன்றைய முதுநிலை பட்டியலில் வரிசை எண். 9ல் இடம் பெற்றுள்ள காரணத்தினாலும் மனுதாரரது பதவி உயர்வு வழங்க விதிகளின்படி இயலாது.

- மேலும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட மூப்புரிமை பட்டியலில் தேனி மாவட்ட அனைத்து பேரூராட்சிகளில் பணிபுரியும் அனைத்து அரசு நிலையாக்கப்படாத கீழ்நிலைப் பணியாளர்களில் 01.01.2025ம் தேதிய பணியாளர்களில் முன்னுரிமை மற்றும் உரிய கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு 20 % பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / வரித் தண்டலர் பதவி உயர்வுக்கு மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்படும் பட்டியலில் மனுதாரரான திரு. மூ. ஈஸ்வரன், தூய்மைப் பணியாளர் என்பவரது முன்னுரிமையானது எவ்விதத்திலும் பாதிப்புகுள்ளாகாது என்ற விபரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் தனது 19.05.2026 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ள மறுவிசாரணை கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, மனுதாரரான திரு. மூ. ஈஸ்வரன் என்பவரை 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.05.2026 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் மற்றும் இவருக்கு உதவியாக வழக்கறிஞர் திரு. முனீஸ்வரன் ஆகியோர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- நான் கடந்த 29 வருடங்களாக பேரூராட்சி துறையில் தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறேன். மேலும் தூய்மைப் பணியாளர் பணியில் இருந்து துப்புரவு மேற்பார்வையாளராக பணியிடத்திற்கு பதவி உயர்வு கோரி பலமுறை விண்ணப்பங்கள் சமர்ப்பித்திருந்தேன். மேற்படி பதவிக்கு உரிய கல்வித் தகுதி மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான உரிய அனைத்து தகுதிகளுடன் தேனி மாவட்டம் மற்றும் மேற்படி பேரூராட்சியில் கடந்த 2023, 2024, 2025 ஆண்டுகளில் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களால் தயாரித்து அளிக்கப்பட்ட பணிமூப்பு பட்டியலில் முதல் நபராக உள்ளேன்.

- தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.01.2024 மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின் 28.11.2025 நாளிட்ட குறிப்பாணை ந.க.எண். 7815/2023ன்படி பேரூராட்சிகளின் புதிய அளவுகோலின்படி தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு தூய்மைப் பணியாளர் பணியிலிருந்து பதவி உயர்வு அளிக்க முதன்முதலில் பணிநியமனம் பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது.

- ஆனால் பண்ணைப்புரம் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தை நிரப்ப தூய்மை பணியாளராக முதன்முதலில் பணியில் சேர்ந்த நாளை கணக்கிடப்படாமல், தனக்கு பின்பாக பணியில் சேர்ந்த இளவருமான மூப்புப் பட்டியலில் எனக்கு பின் நான்காவதாக உள்ள திரு. சு. பழனிச்சாமி என்ற தேனிவீரன் என்பவரை முன்னே கொண்டு வந்து தன்னை பின்னுக்கு தள்ளி விதிமீறி முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

- இந்நிலையில் விதிமுறைக்கு புறம்பாக தற்போது மேற்படி சு. பழனிசாமி என்கிற தேனிவீரனுக்கு ஆதரவாக பேரூராட்சியில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியலுக்கு நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன்.

- மேலும் நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் இருந்து 17.08.2023ஆம் தேதி பணி மாறுதல் மூலம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் பணிபுரிந்து வருவதை காரணம் காட்டி எனக்கு பதவி உயர்வு வழங்க மறுப்பது தவறு என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், ,மதுரை அமர்வில் W.P. No. 121/2020 dated 19.02.2024 வழக்கில் மேற்படி பேரூராட்சி நிர்வாகம் மாவட்ட பணி மாறுதல் பதவி உயர்வில் எந்தவிதமான பாதிப்புகளையும் ஏற்படுத்தாது, பணிமூப்பிலும் பாதிப்புகள் ஏற்படுத்தாது என்றும் தெரிவித்துள்ளது. மேற்காணும் நீதிமன்ற ஆணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

- மேலும், நான் பணி மாறுதல் பெற்றபொழுது எனது பணிமூப்பு மாற்றி அமைக்கப்படும் என்ற தகவல் வாய்மொழியாகவோ மற்றும் எழுத்துப்பூர்வமாகவோ எனக்கு தெரிவிக்கவில்லை. மேற்படி தகவல் குறித்து என்னிடம் எழுத்துப்பூர்வமான கடிதம் கூட என்னிடமிருந்து பெறப்படவில்லை.

- மேலும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவரால் தயாரிக்கப்பட்ட 05.02.2025 பணி மூப்பு பட்டியலில் முதல் நபராக உள்ளேன்.

- மேலும் மேற்படி பதவி உயர்வு கோருவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் W.P.(MD) No. 6185/2026 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

- எனவே பேரூராட்சி செயல் அலுவலர் இனியும் காலதாமதம் செய்யாமல், முதன்முதலில் தூய்மைப் பணியாளர் சேர்ந்த நாளின் அடிப்படையிலும் மற்றும் கல்வித் தகுதி அடிப்படையிலும் தகுதியான தனக்கு துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வு வழங்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

9. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பண்ணைப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் இளநிலை

உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தனது புகார் மனுவில் தேனி மாவட்டம், பண்ணைப்புரம் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு தூய்மைப் பணியாளர்கள் மூலம் பதவி உயர்வு வழங்கிட பேரூராட்சி செயல் அலுவலரால் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் தூய்மைப் பணியாளராக முதன் முதலாக பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் தனது பெயரை ( மூ. ஈஸ்வரன்) கணக்கில் கொள்ளாமலும் மற்றும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் மார்ச் 2025ல் வெளியிடப்பட்ட முதுநிலை பட்டியலில் முதலாவதாகவும் உள்ள தன்னை கணக்கில் கொள்ளாமலும், தனக்கு பின்பாக பணியில் சேர்ந்த மூப்புப் பட்டியலில் நான்காவதாக இடம் பெற்றுள்ள திரு. சு. பழனிச்சாமி என்ற தேனிவீரன் என்பவரை முன்னே கொண்டு வந்து தன்னை பின்னுக்கு தள்ளி விதிமீறி முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதற்கு ஆட்சேபனை தெரிவித்து உள்ளேன் என தெரிவித்திருப்பதை மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் தூய்மைப் பணியாளர் பணியிடத்தில் தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியிலிருந்து 17.08.2023 அன்று பணி மாறுதல் மூலம் பண்ணைப்புரம் பேரூராட்சியில் பணிபுரிந்து வருவதை காரணம் காட்டி பதவி உயர்வு வழங்க மறுப்பது தவறு எனவும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P. No. 12160/2020 வழக்கில் 19.04.2022 நாளிட்ட தீர்ப்பின்படி பேரூராட்சி நிர்வாகம் மாவட்ட பணி மாறுதல் பதவி உயர்வில் எந்தவிதமான பாதிப்புகளும் அதாவது பணிமூப்பிலும் பாதிப்புகளும் ஏற்படுத்தாது என தெரிவித்திருப்பதையும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

தவிர, மனுதாரர் தனக்கு தூய்மைப் பணியாளர் பணியிலிருந்து துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க கோருவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனுதாரரால் வழக்கு (W.P. (MD) No. 6185/2026) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என தெரிவித்திருப்பதையும் மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இந்நேர்வில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) Xxxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவித்திருக்கும் துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் நியமனம் கோருவது தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு (W.P. (MD) No. 6185/2026) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு

10 (3) (b)ன்படி மனுதாரரின் 29.12.2025 நாளிட்ட புகார் மனுவினை விசாரிக்கலாகாது என்பதால் இப்புகார் மனு தொடர்பாக மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. மூ. ஈஸ்வரன்,
4வது வார்டு, 4வது தெரு , க.எண். 2/4, காந்திநகர் காலனி,
சின்னமனூர், தேனி மாவட்டம் - 625 515.
2. செயல் அலுவலர்,
பண்ணைப்புரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/7/26
செயலாளர்
16/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032